இருக்கின்றன. பல வீடுகள் புயலினால் சேதம் அடைந்திருக்கின்றன. இவைகளுக்கு, அங்கே இறந்த மீனவர்களுக்கு 6 பேர்களுக்கு மட்டுமே அரசு நிதியுதவி செய்தது இருப்பதாக அறிகிறேன். மற்றும் அந்த நிதியுதவியை இன்னும் அதிகமாகச் செய்யவேண்டும் என்றும், வலைகளை இழந்த மீனவர்களுக்கு அந்த வலைகளை வாங்குவதற்கும் அரசு உதவி செய்ய வேண்டும்; வீடுகளை இழந்தவர்களுக்கு வீடு கட்டுவதற்கு..................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; சீக்கிரம் முடியுங்கள.

திரு. கே. ஆர். இராமசாமி: உதவி செய்யவேண்டும். உயிரையும், உடமையையும் இழந்து பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு, மீனவர்களுக்கு இந்த அரசு நிச்சயமாக உதவிகளை வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அங்கு உயிரிழந்த மீனவர்களுடைய குடும்பங்களுக்கு ஏற்கனவே உதவி அளிக்கப்பட்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினரே இங்கே ஏற்றுக் கொண்டு கூறியிருக்கின்றார்கள். இன்னும் தொடர்ந்து உதவிகள் செய்யப்படவேண்டுமேயானால், அவை குறித்துக் கவனித்து நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுவார்கள்.

(இ) திருமங்கலம் தொகுதியில் அண்மையில் பெருவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகள் மேற்கொள்ள வேண்டியது குறித்து

திரு. ஆர். சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தென் மாவட்டங்களில் அண்மையில் 6—1—1990 முதல் 9—1—1990 முடிய பெய்த பெருமழையின் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு சுமார் 50 இலட்சம் ரூபாய் வெள்ள நிவாரண நிதியாக அளித்த மாண்புமிகு தமிழனத் தலைவர் டாக்டர் முதல்வர் அவர்களுக்கும், வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி சொல்வதோடு, மதுரை மாவட்டத்தில் என்னுடைய திருமங்கலம் தொகுதியில் 6000 வீடுகளும் பொதுப்பணித் துறையைச் சார்ந்த கண்மாய்களும், நெடுஞ்சாலைத் துறையைச் சேர்ந்த சாலைகளும் சுமார் 1 கோடி ரூபாய்க்கு மேல் வெள்ளச் சேதம் ஏற்பட்டிருக்கின்றது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கடமையை நிறைவேற்றினாலும்கூட, நம்முடைய தமிழக அரசு வருவாய்த்துறை அதிகாரிகளே, வெள்ள நிவாரண

வேலைகளை மதிப்பீடு செய்வதற்கு, திருமங்கலம் தொகுதிக்கும் பாதிக்கப்பட்ட மற்ற மதுரை பகுதிகளுக்கும் அனுப்ப முன் வருமா என்பதை பணிவாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

10-50 மணி

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் தம்பி திரு. சாமிநாதன் அவர்கள் இப்போது கேட்ட கேள்விக்கு 4 நாட்களுக்கு முன்பு விரிவாக, விளக்கமாக நான் பதில் சொல்லியிருக்கிறேன். அது மட்டும் அல்ல, என்ன என்ன நிவாரணப் பணிகள் எடுக்கப்பட்டன என்பது குறித்தும், எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது பற்றியும் நான் தெரிவித்து இருக்கிறேன். கடந்த 4 நாட்களாக மாண்புமிகு உறுப்பினர் தம்பி திரு. சாமிநாதன் அவர்கள் என்னிடம் வந்து திருமங்கலம் தொகுதியைச் சேர்ந்த நான் ஏதாவது ஒரு கேள்வியை உங்களிடம் கேட்டு ஆக வேண்டும். அதற்கு நீங்கள் தருகின்ற பதில் பத்திரிகையில் வந்து ஆக வேண்டும். அப்போது தான் எனது தொகுதியில் எனக்குத் தனி மரியாதை கிடைக்கும் என்று தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருந்தார்கள். தொடர்ந்து சபாநாயகர் அவர்களும் இதற்கு விடை தந்து ஆயிற்று என்று சொல்லிக் கொண்டே இருந்தார்கள். கடைசியில் அனுதாபம் பொறுக்க முடியாமல், தாள முடியாமல், கருணையோடு தம்பி கடைசி நாள் கேள் நான் பதில் சொல்லுகிறேன் என்று சொன்னேன். தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் திருமங்கலம் தொகுதிக்கு, உனது தொகுதிக்கு என்று நான் ஆசையோடு தெரிவித்துக் கொள்கிறேன். மகிழ்ச்சியோடு நீ ஊர் திரும்பு என்று சொல்லி வழி அனுப்பி வைக்கிறேன். (சிரிப்பு).

(ஈ) உறுப்பினர் ஒருவர் கொடுத்துள்ள உரிமைப் பிரச்சினைக்கான அறிவிக்கை குறித்து

திருமதி ரமணி நல்லதம்பி : **

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, உரிமை மீறல் பிரச்சினையைக் கொண்டு வந்து இருப்பதாக அவர்கள் தெரிவித்தார்கள். அப்படி ஏதாவது நோட்டீஸ் கொடுக்கப்பட்டு இருக்கிறதா? அப்படியானால் எனக்கு அதைப்பற்றி அவைத் தலைவர் எந்தத் தகவலும் தரவில்லையே, என்ன காரணம்?

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.